Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள்தினசரி

நாதம்- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 11 ( 24 - 05 - 1992 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 96

## கணித விஞ்ஞான ஆசிரியர் போட்டிப் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் கணித, விஞ்ஞான ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மேற்படி பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 1632 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இதற்கென பத்து பரீட்சை நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 30ஆம் திகதி காலை ஒன்பது மணிமுதல் பத்துமணிவரை பொது அறிவு பரீட்சையும் 10.15 முதல் 11.15 வரை பொதுஉளச்சார்புப் பரீட்சையும் நடைபெற (4ஆம் பக்கம் பார்க்க)

# பாராளு. தெரிவுக்குழு உடைந்தது
# எதிர்க்கட்சிகளால் ஏற்[illegible]ட விளைவு

## பிரேமதாசா அரசுக்கு மேலும் நெருக்கடி

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் பகிஷ்கரித்ததன் விளைவாக பாராளுமன்ற தெரிவுக்குழு செயலிழந்துள்ளது. இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்த இந்த அமைப்பு செயலிழந்து உடைந்து போனதால் பிரேமதாசா அரசுக்கு மேலும் நெருக்கடி தோன்றியிருக்கிறது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு பல கட்சிகளின் கருத்தொருமித்த தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கும் நோக்கில் பிரேமதாசா அரசினால், உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு செயலிழந்த நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பிரேமதாசா அரசு மீது இந்தியா ஒரு இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகித்துவரும் அரசியற் சூழ் நிலையில், அரசாங்கத்தை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், இந்திய சார்பான அமைப்புக்களும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ் [4 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள் மீது தடையில்லை
# சிறிலங்கா அரசு முடிவு

## பேச்சுக்கான கதவை மூட விரும்பவில்லை

விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிறிலங்கா அரசாங்கம் தடைசெய்யாது என சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான வழிவகைகளைத் தடுக்க அரசு விரும்பவில்லை. புலிகள் இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டால் அது எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைக்கு தடையாக அமைந்துவிடும்.

அத்துடன் இவ்வாறு தடை விதிக்கப்பட்டால் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப் பாராளுமன்றத் தெரிவுக் குழு எடுக்கும் முயற்சிகளுக்கு அது பாரிய ஊறு விளைவிக்கும் என அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை புலிகளைத் தடைசெய்வதன் மூலம் மாத்திரமான பயனெதுவும் ஏற்படப்போவதில்லை. மாறாக பௌத்தபிக்குகள் கத்தோலிக்க மத குருமார் உட்பட பலதரப்பினர் எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு இது குந்தகமாக அமையும் என உத்தியோக பூர்வ அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாராளுமன்றத்தை கலைக்குமாறு
# எதிர்க்கட்சியினர் சத்தியாக்கிரகம்

எதிர்க்கட்சியினருக்கு பேச சந்தர்ப்பம் வழங்காத பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் எனக்கோரி எதிர்க்கட்சி எம். பிக்கள் கடந்த வியாழன் பாராளுமன்றத்துக்கு வெளியேயுள்ள படிகளில் அமர்ந்து சுமார் 45 நிமிடங்கள் சத்தியாக்கிரகம் செய்தனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய சோஸலிச முன்னணி மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இச்சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளாததுடன் கடந்த வியாழன் அவர் பாராளுமன்றம் வரவில்லை.

கடந்த புதன்கிழமை மாலை பாராளுமன்ற ஒழுங்கு விதிகளின் கீழ் எதிர்க்கட்சியினருக்கு விவாதங்களுக்கு உரிய சந்தர்ப்பம் அளிக்கப்படாததை ஆட்சேபித்தே இந்த சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

# மட்டக்களப்பு தேடுதல் வேட்டை
# 5 இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஐந்து தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லபபட்டனர். மட்டக்களப்பிலுள்ள உன்னிச்சையிலும் களுவாஞ்சிக்குடியிலும் நடைபெற்ற சம்பவங்களில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த செவ்வாயன்று உன்னிச்சையிலும் களுவாஞ்சிக்குடியிலும் இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையை நடத்தினர். அப்போது அப்பகுதிகளில் கைது செய்யப்பட்ட இளைஞர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களாவர்.

உன்னிச்சையில் இடம் பெற்ற தேடுதல் வேட்டையில் மூவரும், களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்ற தேடுதல் வேட்டையில் இருவரும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது தப்பியோட முயன்றபோதே தாம் சுட்டுக் கொன்றதாக இராணுவத்தினர் காரணம் தெரிவித்துள்ளனர்.

தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு

## மீள்பரிசீலனை செய்யுமாறு ஏனைய கட்சிகள் கோரிக்கை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவை மீள்பரிசீலனைசெய்ய வேண்டும் என ஏனைய எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினையை அரசியல் இலாபத்திற்காகப்பயன்படுத்தாது இருக்குமாறும் அவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கேட்டுள்ளன.

## மண்டைதீவு இராணுவம் தொடர்ந்து எறிகணைவீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் காவலரண்களில் இருந்து யாழ். நகரின் கோட்டை, கொட்டடி, தொலைத்தொடர்புநிலையம் ஆகிய பகுதிகளைநோக்கிநேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மாலை வரை தொடர்ச்சியான 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதற்கிடையில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கரையோரப் பகுதியில் உலங்குவானூர்தி சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை கரையோரக் கடற்பிராந்தியத்தில் நேற்று உலங்கு வானூர்தியில் இருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

தொழிலுக்குச் சென்ற மீனவர்களும், கடலில் மட்டை நாட்கச் சென்ற பெண்களும் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாகப் பயந்து வீட்டிற்கு திரும்பினர் காலையும் மாலையும்வந்தஉலங்கு வானூர்தியில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பாலான மக்கள் பயந்து வீதி மரங்களை நாடி ஒதுங்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தில் 6 தமிழர் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிண்ணையடி தமிழ்க் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் கடந்த புதன்கிழமை இனந் தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஆபத்தான நிலையில் மட்டு. வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இறந்தவர்களுள் தகப்பனும் அவரது ஐந்து குழந் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நூலக எரிப்பு எமது தவறுதான்

-ஐ தே. க. எம். பி

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட விவகாரத்தில் எம்மால் தவறு நேர்ந்தது உண்மைதான். ஆனாலும் இனப் பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க நாம்காரணமாக இருக்கவில்லைஎன்று ஐ.தே.க.எம். பியும் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவருமான ஹட்சன் சமரசிங்கா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## தபாற்பொதிகளை ஏற்ற செஞ்சிலுவை மறுப்பு

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கொழும்புநோக்கிச் செல்லவுள்ள குமாரி கப்பலில் தபாற்பொதிகளை ஏற்றுவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதி மறுத்துள்ளதாக யாழ். பிரதான தபாலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தபாற்பொதிகள் ஏற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி கடந்த நாட்களில் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் அனுமதி வழங்கியிருந்தது தெரிந்ததே. பின்னர் நேற்று அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அப்பேச்சாளர் தெரிவித்தார்.

(பா)

## தவறிவிட்டது

22-05-92 அன்று மருதப்பிள்ளையார் - நவாலி பிப்லி வீதியில் பயணம் செய்யும்போது றஞ்டர் செல லத்துரை (நவாலி வடக்குமானிப்பாய்) என்பவரது றக்டர் புத்தகம், தேசிய அடையாள அட்டை, வடக்கிற்கு வெளியே செல்லும் அனுமதிபத்திரம், வாகன அனுமதிப் பத்திரம் ஆகியவை அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செல்லத்துரை நவாலி, வடக்கு, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2590)

## நன்றி நவிலல்

எனது குருத்துவத்தின் 50 ஆண்டுகள் நிறைவுவிழாவுக்கும், எனது வாழ்வின் 75 ஆண்டுகள் நிறைவுவிழாவுக்கும் எனது ஆயர் பணியின் 25 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கும் எனக்கு நல்வாழ்த்துகள் கூறி, எனக்காக இறைவனை வேண்டுவதாக எனக்குச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த [illegible] யைத் தெரிவித்து, உங்கள் எல்லோருக்காகவும் [illegible] வேன் என்பதையும் அறியத் தர விரும்புகிறேன்.

✝ ஏ. தியோகுப்[illegible]
யாழ். ஆ[illegible]

[சி/4451]

## தவறிவிட்டது

15-05-92 இல் கொழும்பில் இருந்து யாழ். வரும்போது, நெச்சிமோட்டைக்கும், முரசுமோட்டைக்குமிடையில் சாணி பச்சை நிறமுடைய Travelling Bag ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது செ. மோசஸ், இல 15 மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[2595]

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும்.

[சி-4421]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

21.05.92 கொம்படி பரந்தையால் பயணம் செய்யும் போது சி.நடராசா, தம்பலை கலட்டி பருத்தித்துறை என்பவரது தேசிய அடையாள அட்டையும் ரூபா 8500/- அடங்கிய மணிபர்சும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது போக்குவரத்து சேவை அலுவலகம் முரசமோட்டையில் ஒப்படைக்கவும் (2535)

### உதைபந்தாட்டம்

லீக் ஆதரவுடன் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி இன்று (24-05-92) பி.ப. 3.30 மணிக்கு சென் அன்ரனிஸ் எதிர் வைக்கிங்ஸ் சென்றெசஸ் B எதிர் கிறீன் பில்ட். இவ்வாட்டம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும். (2592)

### விற்பனைக்கு

*WJ - Ave 5 Digital Av Video Mixer (Panasonic) Video Camera VHS Vm-500 E (Hitachi) Si Mixer (National)* ஆகியவை விற்பனைக்குண்டு தொடர்பு: புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு [2593]

### போட்டி

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி யூலை மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கடந்தவாரம் மாவட்டப் போட்டிக்குழு கூடி மேற்படி தீர்மானத்தை எடுத்தது. கோத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யூன் 15ம் திகதிக்கு நடாத்தி முடிக்கப்பட்டு மாவட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் யூன் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# தொற்றுநோய்களை தடுக்க தீவிர நடவடிக்கை

## -சுகாதாரவைத்திய அதிகாரிதகவல்

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற தொற்றுநோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாகயாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறான நோய்கள் பரவுவதைத்தடுப்பதற்காக மாநகர சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகம் மிகவும் விழிப்பாக இருக்கிறது. இப் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு மேற்படி நோய் காரணமாக சிகிச்சைக்கு வருபவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர் திரு. தெய்வேந்திரன் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதற்கானஅவசர பணிப்புரையை சகல மருத்துவமனைகளுக்கும் விடுத்திருக்கிறார்.

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகள் தங்கியிருக்கும், அகதிமுகாம்களான திருக்கோணமலை,மன்னார்,வவுனியா ஆகிய முகாம்களில் மேற்படி நோய்கள் பரவியிருப்பதாகக் கிடைத்த உத்தியோகப்பற்றற்ற செய்திகளைத் தொடர்ந்தே இந்த முன்னேற்பாடான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. மேற்படி அகதிமுகாம்களில் தங்கியிருந்த பல அகதிக்குடும்பங்கள் தற்பொழுது யாழ்ப்பாணம் திரும்பியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.யாழ். மாவட்டத்தில் தற்போது தாழ் நிலையில் போசாக்கு நிலை இருப்பதாலும்,போதிய மருத்துவ வசதிகள் இல்லாத நிலைமை நீடிப்பதாலும்மேற்படி தொற்றுநோய்கள் பரவுமாயின் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இந்த நிலையைத் தவிர்ப்பதற்காகவே மேற்படி நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டது.


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4449)


## நினைவு கூருகின்றோம்---
## 1992-05-24

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1985ஆம் ஆண்டு திருக்கோணமலை, பன்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு மட்டக்களப்பு, தாண்டியடிப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
றிச்சாட் (செல்லத்துரை கிருபைராசா - பெரிய-புல்லுமலை, மட்டக்களப்பு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய
★ செல்வன் [நடராசா லிங்கரெட்ணம் - பாலம்-போட்டாறு,தம்பலகமம்,திருக்கோணமலை]
★ மணியண்ணன் செல்வன் (வே.தெய்வநாயகம்-முள்ளிப்பொத்தானை, கந்தளாய்,திருக்கோணமலை)

1988ஆம் ஆண்டு சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
கப்டன் நகுலன் [வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் - நகுலேஸ்வரன் வீதி, மீசாலை வடக்கு,கொடிகாமம்]

மணலாறு, நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
லெப்.விக்கி (மேகவர்ணசாமி சிறிகிருஷ்ணன் - வல்வெட்டித்துறை)
குட்டி (நவாலி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**


(சி/4450)


## சிலப்பதிகாரம் தந்த
# கோவலன்

(பாரம்பரிய ஆட்ட நாட்டுக்கூத்து)



மூத்த கலைஞர்
க. தளையராச
சிங்கம்



அண்ணாவியார்
வே. சுப்பிரமணியம்

செல்லையா -
மெற்றாஸ்மயில்
தயாரித்து
முல்லை / யாழ்,
ஆசிரியர்கள், நடன
சங்கீத ஆசிரியைகள்,
அதிகாரிகள்; அதிபர்கள்
வழங்கும்
நாட்டுக்கூத்து

**இடம்:** யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
**காலம்:** இன்று 24-05-92 (ஞாயிற்று)
**முதல் காட்சி:** மு.ப. 9.00 மணி
**இரண்டாம் காட்சி:** பி.ப. 2.30மணி
அனைவரும் கண்டுகளிப்பதற்குஅரிய சந்தர்ப்பம்

(சி/4454)

## சிந்தனைக்கு

மகத்தான சாதனைகள் சாதிக்கப்படுவது, வலிமையினால் அல்ல; விடாமுயற்சியினால்.

— ஸேம்யல் ஜான்ஸன்:

ஈழநாதம்

81, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம் 24-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025 2889 நிர்வாகபீடம் 2308
க. பெ. எண் 61

# இந்தியாவின் ஆத்திரம் அர்த்தமற்றது

விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விவகாரத்தில் சிறிலங்காவின் நிலைப்பாடு இந்தியாவிற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகளை இந்தியா தடை செய்துள்ளமையை சிறிலங்கா அரசாங்கம் தனக்கு சாதமாகப் பயன்படுத்த வேண்டும்என்று இந்திய தரப்பு பகிரங்கமாகத் தெரிவித்த போதும், சிறிலங்கா அரசாங்கம் அதைப் புறக்கணித்தமையே இதற்கு காரணமாகும்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். என். ஜா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 'விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையானது ஒரு அடையாள நடவடிக்கை' எனக் குறிப்பிட்டதை சிறிலங்காவின் பிரதம மந்திரி சுட்டிக்காட்டியதோடு இன்றைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் தடை விவகாரத்தில் உடனடியாக கடுமையான ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

திரு. ஜாவின் பத்திரிகைப் பேட்டிக்கு சிறிலங்கா அரசாங்கம்தவறான விளக்கம் கற்பித்துள்ளது என்பதே தற்பொழுது எழுந்துள்ள முரண்பாட்டிற்குக் காரணம் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தியத்தூதுவர் ஜாவின் அறிக்கை குறித்து பொதுவாகவே ஒரு குழப்பம் இருந்ததென்பது உண்மைதான். ஆனால். அதைப் புரிந்து கொள்ளாத அளவிற்கு சிறிலங்கா அரசாங்கமும், இராஜதந்திரிகளும் மடையர்கள் அல்ல. ஆனால், திரு. ஜாவின் மறைமுகமான பேச்சை விளங்கிக் கொள்ளாதவாறே சிறிலங்கா பதிலளிக்க விரும்பியது என்பதே உண்மை.

திரு. டி. பி. விஜயதுங்கா, வெளியிட்டுள்ள அறிக்கை வெளிப்படையாக எதிர்க்கட்சிகளையே சாடியிருந்தது. இந்தியா விடுதலைப்புலிகளைத் தடை செய்ய முன்னர் விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வுகள் காணப்பட வேண்டும் என வற்புறுத்தி வந்த எதிர்க்கட்சியினர் தற்பொழுது, புலிகளைத் தடை செய்ய வேண்டும் எனவும், பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என வற்புறுத்துவதையும் வன்மையாகச் சாடியுள்ளது. அதோடு, இச்சாடல்கள் யாவும் எதிர்க்கட்சியினரின் முன்னைய பேச்சுக்களை நேரடியாக மேற்கோள் காட்டியதாகவும் இருந்தது.

மேற்கூறப்பட்டவாறு வெளிப்படையாக திரு.டி.பி. விஜயதுங்காவின் அறிக்கை எதிர்க்கட்சிகளைசாடினாலும் மறைமுகமாக அவ்வறிக்கை இந்திய ஆதரவு சக்திகளையும், இந்தியாவையும் சாடியிருந்தது அத்தோடு திரு. ஜா வழங்கிய பத்திரிகைப் பேட்டிக்குப் பதில் அளிப்பது போன்றும் உள்ளது.

''தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று எவ்வாறு விடுதலைப் புலிகளைக் கூறமுடியும். தேர்தல் போன்ற ஜனநாயக முறை மூலம் இதை அவர்கள் பரீட்சித்துப் பார்த்தார்களா'?' எனத் திரு. ஜா தனது பேட்டியில் குறிப்பிட்டமைக்கு மறைமுகமாகப் பதிலளித்துள்ள திரு டி பி விஜயதுங்கா, ''வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களின் பெறுபேறுகளை உற்று நோக்குமிடத்து விடுதலைப்புலிகளின ஆதரவோடுதான் ஈரோஸ் குழுவினர் வடக்கே சகல தொகுதிகளையும் வெற்றிகாண முடிந்தது'' எனஅநுரா பண்டார நாயக்காவை மேற்கோள் காட்டி டி. பி. விஜயதுங்கா பதிலளித்துள்ளார்.

இவ்வாறாக, சிறிலங்கா பிரதமர் எதிர்க்கட்சிகளையும், இந்தியாவையும் சாடியிருப்பது சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து சரியானதே. இதில் இந்தியா ஆத்திரப்பட எதுவுமே இல்லை. ஆனால், இந்தியா ஆத்திரமடைவதும், சிறிலங்காவை வற்புறுத்த முனைவதும், இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட முயல்வதும், வல்லாதிக்கப் போக்கினதும் வெளிப்பாடேயாகும்.

இந்நிலையில் எந்த அரசாங்கமும் தனது தேசிய நலனை முன்னிட்டே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அண்டை நாடுகளின் வற்புறுத்தல்களுக்குப் பணிந்து, தீர்மானங்களை மேற்கொள்ளுமேயானால் இந்நாடுகள் தமது ஸ்திரத் தன்மையையும், ஆளுமையையும் இழக்க வேண்டி ஏற்படும். இத்தவகையில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நிலைப்பாடு என்பது இந்திய விரோதப் போக்கு என்பதைவிட இலங்கையின் அரசியலில் உள்ள யதார்த்த நிலை என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

---

### இங்கேயே வாழ விரும்புகிறேன்

# அகதிமுகாம் அவலவாழ்க்கை இனிமேல் வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

''இனிமேல் வாழ்ந்தாலும் இந்த மண்ணிலேயே வாழ்வோம் செத்தாலும் சொந்த மண்ணிலேயே சாவோம் என்ற உறுதியுடனேயே இங்கு வந்திருக்கின்றோம்'' இவ்வாறு அண்மையில் இந்தியாவிலிருந்து திரும்பிய திரு. மா. கந்தையா என்பவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்தியாவிலும் இலங்கை அரசின் அகதி முகாம்களிலும் நாம் சந்தித்த துன்பங்கள் அனுபவங்கள் எம்மை இந்த உறுதிநிலைக்கு கொண்டு வந்திருக்கின்றன எனக்குறிப்பிட்டார்.

தமிழக அகதி முகாம்களில் நீண்டகாலமாக தங்கியிருந்த போது அனுபவித்த இன்னல்களையும் நாடு திரும்பிய பின்னர் திருமலையிலும் வவுனியாவிலும் தாங்கள் எதிர்கொண்ட இன்னல்களை குறித்தும் விவரித்தார் அப்போது 1990-ம் ஆண்டில் தாம் இந்தியாவிற்கு சென்றதாகவும், மண்டபம் அகதிமுகாம் உட்பட பல்வேறு அகதி முகாம்களுக்கு அடிக்கடி இடம் மாற்றப்பட்டதாகவும் கூறினார் அடிப்படை வசதிகள் கூட இல்லாத முகாம்களில் தங்க வைக்கப்பட்டதாகவும் காவல் துறையினதும் மற்றும் சிவில் நிர்வாக அதிகாரிகளினதும் பல்வேறு கெடுபிடிகளுக்கு உள்ளாக நேர்ந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கைக்கு திரும்பிச் சென்றால் வீடு கட்டவும் தொழில் தொடங்கவும் இலங்கை அரசு உட்பட பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்திருப்பதாகக் கூறி ஏமாற்றியே தம்மை இங்கு அனுப்பிவைத்ததாகவும் தெரிவிக்கிறார். திருக்கோணமலை அகதி முகாமில் பதினெட்டு நாட்கள் தங்க வைக்கப்பட்ட பின்னர் சுமார் ஐந்நூறு ரூபா மட்டுமே உதவி நன்கொடையாக வழங்கப்பட்டது எனக் கூறிய அவர், வவுனியா வந்த போது மரநிழல்களில் தங்க வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். இங்கு வழங்கப்பட்ட உலர் உணவு வகைகள் வயிற்றோட்ட நோயை வருவிப்பதா[illegible]ந்தது இத்துடன் நுளம்பு[illegible]தொல்லை வேறு இந்தச் [illegible]நிலைகளில் பல்வேறு நோய்[illegible] ஏற்பட்ட போதும் [illegible]பலருக்கும் மருத்துவ சிகிச்சை எதுவும் வழங்கப்படவில்லை. இங்கு தங்கியிருந்த போது தமது குடும்பத்தினருக்கு சுமார் ஆயிரத்துஐந்நூறு ரூபா மட்டுமே வழங்கப்பட்டதாகவும், ஆனால் அது குடும்பத்தினருக்குப் போதுமானதாக இருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இதனைவிட தாம் யாழ்ப்பாணம் வர முடிவு செய்த போது எமது பாதுகாப்பிற்கு நாமே பொறுப்பு என்று எழுத்து மூலம் உறுதி பெற்ற பின்னரே இங்கு வருவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கினர் எனவும் கூறுகின்றார். மேலும் இந்தியாவிலிருந்து வரும்போது இங்கு தொழில் செய்யலாம் என்ற எண்ணத்துடன் தான் வாங்கி வந்த எண்ணாயிரத்து இருநூறு ரூபா பெறுமதியான சைக்கிள் ரிக்ஷா வண்டியையும் அரச அதிகாரிகள் பறித்துவிட்டதாகவும் கவலையோடு தெரிவித்தார்.

சு.க வைச் சேர்ந்த

# 6 பாராளுமன்ற உறுப்பினர் நடத்தை பற்றிஆராயப்படும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை பற்றி உரிமைகள் கமிட்டி ஆராயும் என்று தெரிய வருகின்றது.

சபாநாயகர் முகம்மது கடந்த புதனன்று சபையிலிருந்து வெளியேறியபோது புத்தகங்களை எறிந்தும், சத்தமிட்டும் முறைகேடாக இவர்கள் நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படுவதையடுத்து இவ்விடயம் உரிமை கமிட்டியின் பரிசீலனைக்கு வரும் என்று தினகரன் பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். கோட்ட அதிபர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து அதிபர்களையும் இச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

# ஏழைகளைப் பாதிக்கும் செயல்களை அரசுசெய்கிறது

— அத்தாவுட

இந்த அரசாங்கம் 60 மாத சம்பள முற்பணம் கொடுத்து அதிகாரிகளைதிருப் திப்படுத்த முனைகிறது. ஆனால் ஏழை மக்களை பாதிக்கும் செயற்பாடுகளையே தொடர்ந்து மேற் கொள்கிறது என ஐக்கிய சோஸலிச முன்னணி எம். பி. அத்தாவுட செனிவரத்னா அரசாங்கஅலுவலர்களுக்கான முற்பணக் கொடுப்பனவு சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டுபேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் உணவு முத்திரைகள் வழங்கப்படுவதும் குறைக்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்போது ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது ஆனால் ஏனைய ஆசிரியர்களை பதவியில் அமர்த்துகையில் 1700 ரூபா வேதனமாக வழங்கப்படுகிறது இது பயிற்சி ஆசிரியர்களை அவமதிக்கும் செயலாகும்.

பெரும்பான்மையாக உள்ள வறியவர்களின் சலுகைகளினை பறிக்கும் அரசு செல்வந்தர்களை மேலும் பணக்காரராக்குவதற்கே உதவுகிறது எனத் தெரிவித்தார்.

# தெரணியகலையில் இரு ஜே. வி. பியினர் கைது

[தெரணியகலை]

கடந்த காலங்களில் இடம் பெற்ற தீவிரவாத வன்செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் இரண்டு ஜே. வி. பி. சந்தேக நபர்களைத் தெரணியகலைப் பொலிஸார் கடந்த திங்கள் இரவு கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தெரணியகலை தேர்தல் தொகுதியில் ஐந்து கொள்ளைகளை நடாத்தியதுடன் உடப்பொன தோட்டத் தொழிற்சாலைக்குத் தீ வைத்து நாசப்படுத்தியதோடு ஐந்து அஞ்சல் அலுவலகங்களுக்கும் தீ வைத்ததாகப் பொலிசிடம் ஒப்புக்கொண்டுள்ளனராம்:

இதைத் தொடர்ந்து இவர்கள் வேறும் பல சம்பவங்களிலும் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் மேற்கொண்டும் நடைபெற்று வருகின்றன.

தெரணியகலை பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டி.எஸ். வேகம்தே தலைமையில் சென்ற கோஷ்டியே இவர்களைக் கைது செய்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனசக்தி ச. ச.நி 44-ம் ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி ஜன சக்தி சனசமூக நிலையத்தின் 44 ஆம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி மூன்று நாட்கள் சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமானது.

இப்போட்டிகளில் குறிப்பாக சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள் பெரியோர்களுக்கான நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன. அத்துடன் நேற்றுக் காலை 7மணிக்கு 5கி மைல் மரதன் ஓட்டமும் நடைபெற்றது. இவற்றை அடுத்து இறுதி நாளாகிய இன்று போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கலும் அதைத்தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் என தெரிய வருகின்றது. (பா)

## தாய்லாந்து

# பிரதமர் ராஜினாமா நாட்டிலிருந்தும் வெளியேறலாம்?

(பாங்கொக்)

தாய்லாந்துப் பிரதமர் சுசிந்தர் பிறையோ தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். பிரதமர் தாய்லாந்து மன்னரை நேற்றுமுன் தினம் மாலை சந்தித்த போது தமது பதவியை இராஜினாமாச் செய்வது பற்றி அறிவித்தார் எனக் கூறப்படுகிறதாயினும் இதனை உறுதி செய்ய முடியவில்லை என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பிரதமர் சுசிந்தர் எந்த நேரமும் நாட்டைவிட்டு வெளியேறத் தயாரான நிலையில் பாங்கொக்கிற்கு அருகேயுள்ள விமானப் படைத்தளமொன்றில் விமானம் ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும், பிரதமர் தமது குடும்பத்தினரை ஏற்கனவே வெளிநாடொன்றிற்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிய வருகிறது.

தாய்லாந்தில் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் கடந்த வாரம் பரவலாக இடம் பெற்றதும், அப்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

# கவிஞனையும் போராளியையும் எமது மண்ணுக்காக இழந்தோம்

-- யோகி

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியை இழந்ததன் மூலம் நாம் ஒரு பெரிய கவிஞனையும் போராளியையும் எமது மண்ணுக்காய் இழந்து விட்டோம். கஸ்தூரி வாழ்ந்த காலம் குறைவு அவர் வீரச்சாவை எய்திவிட்டார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் இந்த உணர்வே ஏற்பட்டது என திரு. யோ கரட்ணம் யோகி தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ''கஸ்தூரியின் ஆக்கங்கள்'' வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் இப்போது மிகப்பெரிய படையினை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் கஸ்தூரியின் உள எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளியிடுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தளபதி ஜெயா தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் திருமதி அடல் பாலசிங்கம் வெளியிட்ட உரையையும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் செல்வி பாரதி ஆகியோர் ஆய்வு உரைகளையும் நிகழ்த்தினர்.

இந்த வெளியீட்டு விழாவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில்:

கஸ்தூரி ஒரு போராளி மட்டுமல்ல, ஒரு [illegible] நாடகப் பிரதி[illegible]பவர், நாடகங்களை [illegible] நடத்துபவர் ஒரு எழு[illegible]ளர்.

கஸ்தூரியின் சிறுகதைகளையும், நாவலையும் அச்சில்தான் காணமுடியும். அவரின் ஆளுமையை ஒலிப்பதிவு நாடாவிலும் நாடகங்களிலும் தான் தெரியும்.

இந்திய இராணுவத்தினால் பாதிக்கப்பட்ட இவரின் இதயத்தின் வெளிப்பாடே இன்றைய ஆக்கங்கள் என தெரிவித்தார்.

செல்வி மாலினி, செல்வி ஆர்த்தி ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# மண், மொழி, கலாசாரம் காக்கப்போராடுகின்றோம்

- கஸ்தூரியின் தந்தை

(யாழ்ப்பாணம்).

எமதுகுடும்பத்தில் ஒருவரை யாவது புலிகள் இயக்கத்தில் சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே எனது மகள் கஸ்தூரியைப் படிக்கும் போது புலிகள் இயக்கத்தில் சேர்த்துவிட்டேன் என்றார் கஸ்தூரியின் தந்தை திரு. கணேசன் அவர்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கஸ்தூரியின் ஆக்கங்கள் நூல் வெளியீட்டுவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டுஉரையாற்றிய திரு. கணேசன்மேலும் கூறுகையில், நாம் எதற்காகப்போராடுகின்றோம் எமது மண், எமது கலாசாரம, எங்கள் மொழி என்பனவற்றைக் காக்கவே எதிரியுடன் போராடுகின்றோம். இதனை அறிந்தே நான் எனது மகளை 1983-ல் இயக்கத்திற்கு அனுப்பிவைத்தேன்.

ஒரு மனிதன் உயிர்வாழும் காலம் ஆகக்கூடியது 75 வருடங்கள் தான். அதற்குள் எம்மாலான உதவியை எவ்விதத்திலும் வழங்க எல்லோரும் முன்வரவேண்டும்என்றார் (05

# க.பொ.த (உ. த) பரீட்சை விடைத்தாள் திருத்தவேலை

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற க. பொ. த உயர்தர விசேடபரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி பரீட்சை விடைத்தாள்கள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் வைத்துத் திருத்துவதற்கான நடவடிக்கைகளைப்பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ் விடைத்தாள்களைத் திருத்துவதற்கு யாழ். மாவட்ட ஆசிரியர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச

# பாடசாலைத் தளபாடங்கள் கப்பலில் வரவுள்ளன

(நமது நிருபர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்கள் விரைவில் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடந்த பல வருடங்களாகப் பாடசாலை மாணவர்களுக்கான மேசை, கதிரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதும் இவை கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படாததும் தெரிந்ததே. தற்போது கொழும்பு சென்றுள்ள கல்வித்திணைக்களக் கணக்காளர் தேவையான தளபாடங்களை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை பெரும்பாலும் அடுத்த மாத இறுதிக்குள் இங்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிகள் இன்று யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாம் இடத்திற்கான போட்டியில் நவாலி முரசொலி அணியை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனிஸ் அணி ஆடவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி ஆடவுள்ளது.

# வற்றாப்பளை ஷெல் வீச்சில் காயமடைந்தவர் மரணம்

வற்றாப்பளை எறிகணை வீச்சில் காயமடைந்திருந்த நவரத்தினம் சிவநேசம் என்ற பெண் மருத்துவமனையில் மரணமானார். இவரது கணவரான நவரத்தினமும், மகளான யுவராஜினியும் ஸ்தலத்திலேயே பலியாகியமையும் மற்றொரு மகள் கை துண்டிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வறுமைநிவாரண முத்திரை 26க்கு முன் பெறலாம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச சபை (உதவி அரசாங்க அதிபர்) பிரிவுக்கு உட்பட்ட சகல பகுதிக் கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் தற்போது வறுமை நிவாரண உணவு முத்திரையும், குடும்ப அடையாள அட்டைகளும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உணவு முத்திரைகளையும், குடும்ப அடையாள அட்டைகளையும் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தத்தமது பகுதிக் கிராம சேவை அலுவலர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றை நேரில் சென்று பெற்றுக் கொள்ளாதவர்கள் அடுத்த வாரம் புதன் கிழமை முதல் தமது புதிய உணவு முத்திரைகளை யாழ். அரசாங்க அதிபர் பணிமனையிலே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [24]

# விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் தடைசெய்யப்படலாம்

-ஜேக்கப்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி உட்பட இருபத்து இரண்டு அமைப்புக்களுக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று மத்திய அமைச்சர் எம். எம். ஜேக்கப் கேரளாவில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ் விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து பேசிவருகிறார். விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப் பட்டால் அதனை எதிர்த்து போராடப் போவதாகவும் புலிகளுக்கு மருத்துவம் செய்ய தான் தயாராக இருப்பதாகவும் இவர் தெரிவித்திருப்பதும் தெரிந்ததே.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் ஒருவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுடன் கடந்த சட்டமன்ற தேர்தலில் இக்கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்று ஜனநாயக ரீதியில் மக்கள் அங்கீகாரம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற

கரிக்க முடிவு செய்துள்ளன இந்தத் தீர்மானத்தின் பின்னணியில், இந்திய அரசின் மறைமுக அழுத்தங்கள் இருக்கலாம் கொழும்பு என்று அரசியல்வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

கிட்டத்தட்ட ஒருவருடமாக இயங்கிவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் எந்தவொரு தீர்வுத் திட்டத்தைதையும் முன்வைக்கவில்லை என்பது வாசகர்கள் அறிந்ததே வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பாக நிலவிய கருத்து வேறுபாடுகள் காரணமாக இந்தக் கட்சிகள் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்க தயங்கின.

புலிகளின்மீது இந்தியா விதித்த தடையால் இந்திய இலங்கை உறவில் எழுந்துள்ள முறுகல் நிலையைப்பயன்படுத்தி பிரேமதாசா அரசை மேலும்நெருக்கடியில் தள்ளிவிடும்நோக்கிலும் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியானதீர்வு எதுவும் வைக்காமல் தட்டிக்கழிக்கும் முயற்சியாகவும் சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து விலகிவிட முடிவு செய்துள்ளது.

ஒரே

தைகளுமாவர். தாயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மண்டைதீவு

பல தடவைகள் யாழ். நகரின் கரையோரப்பகுதிகளைநோட்டமிட்டுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நீண்ட நாட்களின் பின்னர் இப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால்தொடர்ச்சியாகநான்காவது நாளாக ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனைத் தொடர்ந்து கரையோரப் பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் பதற்றம் காணப்படுகின்றது. சிலர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். (பா, 51)

கணித

வுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கல்வித்திணைக்களத்தினால் நாளைதபாலில் சேர்க்கப்படும் என திணைக்கள அதிகாரி ஒருவர் தெரித்தார். (ச)

# இலங்கை அகதிகளை கட்டாயப் படுத்தக்கூடாது

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு உரிய உரிமைகளைப் பெற்றுத் தருவதிலும், பாதுகாப்பளித்தலிலும் இந்திய அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நேற்றுத் திருச்சியில் நடைபெற்ற ஜனதா தளக் கட்சியின்தமிழ் மாநிலச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளைக் கட்டாயப் படுத்தி இலங்கைக்கு அனுப்பக்கூடாது என்று மற்றொரு தீர்மானம் கூறுகிறது செயற் குழுக் கூட்டம் இக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் சிவாஜி கணேசன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.

யதை காணக்கூடியதாக இருந்தது. மொத்தமாக இப்பகுதிகளை மூன்று உலங்குவானூர்திகள் சுற்றிவட்டமிட்டன.

இதில் ஒன்று கல்முனை இராணுவ முகாமில் இறங்கியது ஒன்று கடலோரப்பகுதிகளை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் மற்றதில் இருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் கடற்பகுதியில் நின்ற மீனவர்களை நோக்கி தீர்க்கப்பட்டது.

இருபதுக்கும் மேற்பட்ட வள்ளங்களில் சென்ற குருநகர் பகுதி மீனவர்கள் கடலில் பாய்ந்து தெய்வாதீனமாக உயிர் பிழைத்து வந்து சேர்ந்தனர். ஒரு இளைஞர் சிறு காயமடைந்தார் மூன்று வள்ளங்கள் சேதமடைந்தன.

சுமார் 15 நிமிடங்கள் தாக்குதலை நடத்திமுடித்து உலங்குவானூர்திகள் சென்றதன் பின்பாக மீனவர்கள் தத்தமது வள்ளங்களில் ஏறிக்கரை வந்து சேர்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குமரன், சின்னத்தம்பி, சேவியர் ஆகியோரது வள்ளங்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. டொனால்ட் இராக (வயது 18) சிறுகாயத்துக்கு உள்ளானார்.

[பா,24,51,]

# கைது

கொழும்பில் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிகழ்ச்சி பின்போடப்பட்டது

செஞ்சோலை சிறுவர்இல்ல வளர்ச்சிக்கான சப்தஸ்வராவின் இசை மாலை நிகழ்ச்சி பிற் போடப்பட்டுள்ளது.

இன்று 24 ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறவிருந்த இசை மாலை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது என்றும் அதற்குரிய திகதி பத்திரிகை, வானொலி மூலம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.


## மரண அறிவித்தல்

### திரு. சின்னப்பா சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
(சாவகச்சேரி)

92-05-19 அன்று சிவபதம் அடைந்த திரு. சின்னப்பா சபாரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களது இறுதிச்சடங்குகள் 20 ஆம் திகதி ஈழநாதம் இதழில் அறிவித்ததை தவிர்க்கமுடியாத காரணத்தால் 92-05-20 ஆம் திகதியே சாவகச்சேரி மயானத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

பதம மகால்
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
92-05-22

தகவல்:
ச. சிவராஜா
(மகன்)

(2594)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.